கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

2026ம் வருடம் மார்ச் மாதம் 04ம் நாள் புதன்கிழமை
E.A No.6/2026
இன்
நிறைவேற்று மனு எண்.12/2020
இன்
அசல் வழக்கு எண்.459/2009
----

அமுதா ... மனுதாரர்/மனுதாரர்/வாதி

/எதிர்/

1) சுந்தரக்குமார் (இறப்பு) ... 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2) சீத்தாலட்சுமி
3) சந்தரமூர்த்தி
4) விஜயலட்சுமி ... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்

இறுதியாக இம்மனுவானது 27.02.2026ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.G.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும்,

வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் அசல் நிறைவேற்று மனுவில் திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

1.1) அசல் நிறைவேற்று மனுவானது கடந்த 2020ம் ஆண்டு தாவா 1, 2ம் இலக்க சொத்தில் உள்ளடக்கிய 3வது இலக்க சொத்தில் ஒட்டி எழுப்பியுள்ள கட்டுமானத்தையும், தென்வடல் கீழ்புறம் எழுப்பியுள்ள (நீ.ம.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள BIKCB பகுதி) சுவரையும் இடித்து அப்புறப்படுத்த வேண்டும் எனவும், தவறும்பட்சத்தில் நீதிமன்ற அமீன் மூலம் மேற்படி செயலுறுத்துக்கட்டளையினை நிறைவேற்றம் செய்து உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் நிறைவேற்று மனுவை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**3) <u>தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்/மனுதாரர்/வாதி தனது மனுவில், நிறைவேறுதல் மனுவின் சொத்து விவரத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும், எனவே, நிறைவேறுதல் மனுவில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) அசல் வழக்கு எண்.459/2009 தீர்ப்புரையானது மாண்புமை திருமங்கலம், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேல்முறையீட்டு மனு எண்.17/2020ல் அசல் வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு உத்தரவாகி உள்ளது. மேலும், மேற்படி மேல்முறையீடு தீர்ப்பில் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பானது 1 1/2 அடி என்று குறிப்பிட்டு பகுதியாக அனுமதிக்கப்பட்ட நிலையில், அசல் நிறைவேறுதல் மனுவில் மேற்படி

ஆக்கிரமிப்பு விஸ்தீரணம் மேற்படி 2 அடி அளவை 1 1/2 அடி என்று மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பித்த நிலையில், மேற்படி மேல்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புரைப்படி அசல் நிறைவேறுதல் மனுவில் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை பொறுத்து சீர்திருத்தம் செய்வது அவசியம் என்றும், அதன்படி 3வது இலக்க சொத்தை குறிப்பிட்டு, ஆக்கிரமிப்பு 1 1/2 அடி என்றும், மேற்படி விவரத்தை அசல் நிறைவேறுதல் மனுவில் மேல்முறையீடு காலத்திலும் சீர்திருத்தம் செய்ய மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) மேலும், மேற்படி மனுதாரர் தரப்பில் கீழ்கண்ட மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் முன்தீர்ப்பானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***Mangayarakarasi Ammal and 2 others***

***Vs.***

***Nagammal and 2 others***

***2009 (5) CTC 444***

***dated: 07.10.2009***

..... மேற்படி, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாண்புமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் முன்தீர்ப்பானது

இம்மனுவின் சாராம்சத்திற்கும், பொருண்மைகளுக்கும் பொருந்துவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3.4) இந்நிலையில், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் அசல் வழக்கின் தீர்ப்புரையானது, மாண்புமை திருமங்கலம், சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு மனுவில் பகுதியாக அனுமதிக்கப்பட்ட நிலையில், அசல் நிறைவேற்று மனுவை சீர்திருத்தம் செய்வது சட்டப்படியானது ஆகும். இந்நிலையில், 1வது சீர்திருத்தம் பொறுத்து மனுதாரர் தரப்பில் IA No.5/2025 ல் இதே பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, IA No.5/2025 மனுவானது 30.01.2026ம் தேதி இந்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சீர்திருத்த மனுவான IA No.5/25 மனுவானது உரிய முறையில் வடிவமைக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவிலும் முழுமையான சீர்திருத்தங்களை திருத்தம் செய்யும் விதமாக இம்மனு தாக்கல் செய்யப்படவில்லை. அசல் நிறைவேறுதல் மனுவில் J காலத்தில் எந்த டிகிரி அடிப்படையில் அசல் நிறைவேறுதல் மனு நிறைவேற்றப்பட வேண்டும் என்று மனுதாரர் இந்த சீர்திருத்த மனுவை தாக்கல் செய்யவில்லை.

3.5) மேலும், 1வது சீர்திருத்தத்தை பொறுத்து ஏற்கனவே சீர்திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டு, அது இருதரப்பு வாதுரைக்கு பின்னர் தள்ளுபடியான நிலையில், அதே பரிகாரத்தை மீண்டும் கேட்டு இம்மனுவை தாக்கல் செய்ததன்படி இம்மனு சி.பி.சி பிரிவு 11ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் இம்மனு மேற்படி மேல்முறையீடு உத்தரவில் உள்ளவாறு அசல் நிறைவேறுதல் மனுவில் சீர்திருத்தம் செய்ய முழுமையான சீர்திருத்தங்களுடன் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் இதுவரை மேற்படி மேல்முறையீடு நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தீர்ப்பாணை தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரரின் சீர்திருத்தங்கள் சட்டப்படியானது என்று தீர்மானிக்க இயலாது. அதன்படி, இம்மனு உரிய முறையில் வடிவமைக்கப்படாத நிலையில், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 04ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.04 18:24:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.04 18:24:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.6/2026
இன்
நிறைவேறுதல் மனு எண்.12/2020
அசல் வழக்கு எண்.459/2009
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 04.03.2026